# PDM COURT, SANKARANKOVIL

**தேதி: 24-01-2020**

**அசல் வழக்கு எண்: 404/2015**

**பி.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியப்பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் அ.கரிசல்குளம் கிராம நிர்வாக அலுவலராக 2017-ம் வருடம் முதல் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எதிர் வழக்குரையில் வாதியின் வழக்குரை சங்கதிகளை மறுத்து மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பிரதிவாதிகள் தரப்பு வழக்கு என்ன என்பது பற்றி எவ்வித விபரமும் கூறவில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். தாவா சொத்தின் வழியாக செல்லும் சமயத்தில் தாவா சொத்தை பார்த்துள்ளேன். நத்தம் நிலவரி திட்டத்திற்கு முன்பு பிராது 1-ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியான 2-ம் தபசில் சொத்தினை பாதை என வகைப்பாடு செய்வதற்கு முன்பு வாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினோமா என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியவில்லை. 2-ம் தபசில் சொத்தினை பாதை என வகைப்பாடு செய்துள்ளதால் வாதிக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் அந்த வகைப்பாட்டினை நீக்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் அரசுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் வாதியின் பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் திருத்தம் செய்ய பரிகாரம் கோரியுள்ளார். தாவா

சொத்துக்கள் ஆதியில் புணமாலைஆசாரி என்பவருக்கு 02.07.1932 தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டு அவரால் சர்வசுதந்திரமாக அனுபவம் செய்யப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. புணமாலை ஆசாரி என்பவர் அவரது மனைவியான மாடத்தியம்மாள், மகள் பாப்பாத்தியம்மாள் என்ற ஆனைமுத்தம்மாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு விட்டு 50 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. புணமாலை ஆசாரி என்பவர் அவரது மனைவியான மாடத்தியம்மாளும், மகளான பாப்பாத்தியம்மாள் என்ற ஆனை முத்தம்மாள் பிராது தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்த நிலையில் மேற்படி மாடத்தியம்மாள் 40 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றாலும், பாப்பாத்தியம்மாள் என்ற ஆனைமுத்தம்மாள் பிராது தபசில் சொத்துக்களை அனுபவம் செய்து வந்து 29.03.1989ல் அவரும், அவரது மகன் மாரிமுத்து என்பவரும் வாதி பெயரில் 29.03.1989 தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றாலும் சரியல்ல. 1-ம் தபசில் சொத்தில் இருந்து வரும் தொழுவிற்கு வடக்கே அந்த தொழுவில் இருந்து வரும் வாதியால் வாதியின் சொந்த பயன்பாட்டிற்கு போடப்பட்டுள்ள காலிமனையில் மாடுகள் கட்டியும், ஆடுகள் அடைத்தும், டிராக்டர் நிறுத்தியும் வாதியால் அனுபவம் செய்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. 1-ம் தபசில் சொத்து முழுமையும் வாதியின் அனுபவத்திலும், ஆளுகையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிராது 2-ம் தபசில் சொத்து பிராது 1-ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என்றாலும், பிராது 2-ம் தபசில் சொத்தில் வேறு யாருக்கும் பாத்தியமோ, அனுபவமோ இல்லை

என்றாலலும் சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் ஆளுகைக்குட்பட்ட 2, 3 பிரதிவாதிகள் பிராது 2-ம் தபசில் சொத்தை வாதியிடம் சம்பதம் பெறாமலும், முன் அனுமதி பெறாலும் விசாணை செய்யாமலும், இயற்கை நியதிக்கு மாறுபட்டு பாதை என வகைப்பாடு செய்து புல வரைபடம் மற்றும் சிட்ட அடங்கல் ஆகியவற்றில் பாதை என காட்டி தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட பிராது 2-ம் தபசில் சொத்தைப் பாதை என வகைப்பாடு செய்ய அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வகைப்பாடு செய்துள்ளது வாதியையும், வாதியின் உரிமையையோ கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. சட்டதிற்கு புறம்பாக வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது 2-ம் தபசில் சொத்தினை பாதை என வகைப்பாடு செய்துள்ளது நில ஆர்ஜிதம் செய்யாமல் அவ்வாறு வகைப்பாடு செய்துள்ளது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல. வாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட 2-ம் தபசில் சொத்தை பாதை என வகைப்பாடு செய்துள்ளதை பதிவிலிருந்து நீக்காவிட்டால் வாதிக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாக உள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:</u>** இல்லை.